Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.60/2018

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.செல்லப்பாண்டியன் | Occupation | சார்பு ஆய்வாளர் |
| Father’s name | பால்ச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of April 2026.

20.04.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 09.07.2016 அன்று 04.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது ராமனுஜம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.535/2016 பிரிவுகள்.279, 304(A) இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார் மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

இவ்வழக்கில் இறந்த சிவக்குமார் என்பவர் காவல்துறையினராகிய எங்களுக்கும் அறிமுகமான வழக்கறிஞர் என்றால் அவர் வழக்கறிஞர் என்பது பற்றி எனக்கு தெரியும். பொதுவாக விபத்து ஏற்பட்டால் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தால் அதனை பதிவு செய்வோம் என்றால் சரிதான். மேற்படி இவ்வழக்கு விபத்தானது நடந்தவுடன்

காவல்நிலையத்திற்கும் 108 ஆம்புலன்ஸிற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி இவ்வழக்கின் புகார்தாரரின் தங்கையின் கணவர் தான் இவ்வழக்கில் இறந்த நபர் என்றாலும் சம்பவத்தன்று இவ்வழக்கில் இறந்த நபர் குடிபோதையில் இருசக்கர வாகனம் ஓட்டிவந்ததை மறைத்து இவ்வழக்கின் எதிரிதான் கவனக்குறைவாக லாரியை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்தியதாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையானது எதிரிமீது பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்த நபருக்கு இழப்பீடு பெறுவதற்காக பொய்யான சங்கதிகளை கூறி காவல்துறையும் உதவி செய்து மேற்படி முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.